**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**S.C. No: 92/19**

**Deposition of Witnesses for PW6**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.பழனிச்சாமி | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **12.08.2024**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆவுடையார்கோவில் காமராஜர் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பழைய இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 5 வருடத்திற்கு முன்பு மாலை அடியார்குளம் கரை அருகே எனது இரும்பு கடையில் இருந்தபோது போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். அப்போது சண்டை நடந்தது சம்பந்தமாக விசாரித்தார்கள். சண்டை நடந்ததாக கேள்விப்பட்டு போலீசார் அழைத்து சென்றதாக சொன்னார்கள். காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அடிப்பட்டவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். உள்ளூர்காரர்கள் தான். பெயர் விவரம் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

கடந்த 03.02.2019ம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் தான் வைத்திருந்த இரும்பு கடையில் இருந்ததாகவும் அந்த கடைக்கு எதிரே கூட்டமாக இருந்ததாகவும் சென்று பார்த்தபோது எங்கள் தெருவில் வசிக்கும் அங்கமுத்து மகன் கூலு என்ற காளிதாஸ். மாரிமுத்து மகன் காசி விஸ்வநாதன் இருவரும் அதே தெருவை சோந்த காளிமுத்து மகன் சக்திவேலை ஏன்டா தேவடியா மகனே எப்ப பாத்தாலும் பொம்பள பிள்ளைங்களிடம் பிரச்சினை

செய்து கொண்டே இருக்கிறாய் என்று நீ உயிருடன் இருந்தால் தான் இப்படி செய்வாய் என்று சொல்லி இருவரும் கைகளால் சக்திவேலின் நெஞ்சு, முகம் ஆகியவற்றில் குத்தியும் கீழே தள்ளி இருவரும் காலால் சக்திவேலின் முகம், நெஞ்சு, வயிறு ஆகியவற்றால் காலால் ஓங்கி மிதித்ததாக சக்திவேல் அய்யோ அம்மா என்று கத்தியதாகவும் சக்திவேல் தம்பி வெற்றிவேல் அவரது மாமா ராஜமாணிக்கம் அவரது அண்ணன் முனியய்யா ஆகியோர் விடுங்கடா அவனை ஒன்றும் செய்யாதீங்க என்று சத்தம் போட்டதாகவும் போங்கடா தேவடியா புண்ட மகன்களே இவனுக்கு சப்போட்டா பன்றீங்க ஒழுங்கு மரியாதை ஓடிடுங்கடா என்று சொல்லி உங்களையும் இதே மாதிரி கொன்றுவிடுவோம் என மிரட்டிவிட்டு ஓடி விட்டதாகவும் இது அங்கு நின்ற எனக்கும் ஸ்டாலின், ரஜினி ஆகியோருக்கு தெரியும் என்று வெற்றிவேல், ராஜமாணிக்கம், முனியய்யா ஆகியோர் சக்திவேலை தூக்கி பார்த்தபோது காது, மூக்கு, வாயில் இரத்தம் வரவே 3 பேரும் சேர்ந்து பக்கத்தில் இருந்த ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் பின்பு அங்கிருந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றதாகவும் அங்கு இறந்துவிட்டதாகவும் மேற்படி சக்திவேலின் கொலை சம்பவத்தில் கூலு என்ற காளிதாஸ், காசிவிஸ்வநாதன் ஆகியோருடன் சாத்தையா மகன் ராஜபாண்டி, ராக்கன் மகன் மாரிமுத்து ஆகியோர் கொலை சம்பவத்தில் ஈடுப்பட்டார்கள் என்று நான் தெரிந்துக்கொண்டேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.